


**24.01.2025**

## தலைப்பு செய்திகள்

1. **நாட்டில் பெண் குழந்தைகளின் மேம்பாட்டிற்கான அதிக** வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. **உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 2 ஆயிரத்து 402** கோடி ரூபாய் மதிப்பிலான போர்கள கண்காணிப்பு கருவியின் செயல்பாட்டை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத்சிங் புதுதில்லியில் இன்று தொடங்கி வைத்தார்.

3. **தமிழக அரசின் மக்கள் நலத்திட்டங்களால் அனைத்து** குடும்பங்களும் பயன்பெற்று வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. **கோடை காலத்தில் தடையற்ற சீரான** மின்விநியோகத்திற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளதாக மாநில மின்துறை அமைச்சர் திரு. செந்தில்பாலாஜி தெரிவித்துள்ளார்.

5. **I.S.L. கால்பந்து போட்டியில்** பெங்கால் - கேரள அணிகள் இன்று மோதுகின்றன.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

**பிரதமர்**

**நாட்டில் கல்வி, சுகாதாரம், தொழில்நுட்பம்,** திறன்மேம்பாடு உள்ளிட்ட முக்கியத் துறைகளில் பெண் குழந்தைகளின் ஆளுமையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

தேசிய பெண்குழந்தைகள் தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி அவர் வெளியிட்ட செய்தியில், அனைத்து துறைகளிலும் மகளிருக்கான வாய்ப்புகளை உருவாக்குவதில் அரசு உறுதிபூண்டுள்ளதாக தெரிவித்தார்.

பல்வேறு பிரிவுகளில் பெண்குழந்தைகளின் சாதனைகளால் நாடு பெருமை கொள்வதாக குறிப்பிட்ட பிரதமர், பெண்களுக்கு சமவாய்ப்பளித்து பாகுபாடற்ற சமுதாயத்தை உறுதிசெய்ய அரசு கவனம் செலுத்தி வருவதாகவும் கூறினார்.

பெண்குழந்தைகளை பாதுகாப்போம்! பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்!" "பேட்டி பச்சாவோ! பேட்டி படாவோ! இயக்கத்தை பிரதமர் கடந்த 2015-ம் ஆண்டு ஜனவரி 22-ம் தேதி தொடங்கி வைத்தது குறிப்பிடத்தக்கது.

**தேசிய பெண் குழந்தைகள் தினத்தை ஒட்டி மத்திய தகவல்** ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்ட செய்தியில் கல்வி உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் மகளிர் சிறப்பான பங்களிப்பை வழங்கி வருவதாக பாராட்டு தெரிவித்தார்

வளமான எதிர்காலத்திற்கு மகளிர் ஆளுமை என்ற இந்த ஆண்டின் கருப்பொருளுடன் நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு மத்திய மகளிர் குழந்தைகள் நல மேம்பாட்டு அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது.

குறிப்பாக சமூகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் சவால்களை எதிர்கொண்டு ஒருங்கிணைந்த வளர்ச்சியை உறுதிசெய்யும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன.

❖❖❖❖❖❖❖❖

## U.P. நிறுவன நாள்

**உத்தரபிரதேச மாநில நிறுவனநாள் இன்று** கொண்டாடப் படுவதை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டோர் அம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

மிகச்சிறந்த திறமைகளுடன் கடும் உழைப்பையும் வழங்கிவரும் அம்மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியும், வளமும் பெருகட்டும் என குடியரசு தலைவர் கூறியுள்ளார்.

பிரதமர் வெளியிட்டு வாழ்த்து செய்தியில் இந்திய கலாச்சாரத்துடன் தொடர்புடைய பல்வேறு புனித ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்ற இம்மாநிலம் நாட்டின் வளர்ச்சியில் கடந்த 8 ஆண்டுகளாக சிறந்த பங்காற்றி வருவதாக கூறியுள்ளார்.

இம்மாநில மக்களின் நலன் மற்றும் அபரிமிதமான திறமைகளை வெளிக்கொணர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖

## பிரதமர்

**தேசிய மாணவர் படை மற்றும்** நாட்டுநல பணித்திட்ட மாணாக்கருடன் பிரதமர் புதுதில்லியில் இன்று கலந்துரையாடுகிறார்.

நாட்டின் 76-வது குடியரசுதினம் நாளைமறுநாள் கொண்டாடப்படும் நிலையில் குடியரசுதின பேரணியில் இடம்பெறும் **NCC** மற்றும் **NSS** பிரிவின் அலங்கார அணிவகுப்பு குறித்தும் பிரதமர் கேட்டறிகிறார்.

❖❖❖❖❖❖❖❖

## ராஜ்நாத் சிங்

**உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 2 ஆயிரத்து** 402 கோடி ரூபாய் மதிப்பிலான சஞ்சய் போர்கள கண்காணிப்பு கருவியின் செயல்பாட்டை மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் திரு. ராஜ்நாத்சிங் புதுதில்லியில் இன்று தொடங்கிவைத்தார்.

வரும் மார்ச் மாதம் முதல் 3 கட்டங்களாக இந்திய ராணுவத்தில் இந்த கண்காணிப்பு கருவி இணைக்கப்படவுள்ளது.

போர் நிலவரங்கள் தொடர்பான வெளிப்படையான துல்லிய தகவல்களை அளிக்கும் சென்சார் கருவிகளுடன் அதிநவீன தொழில்நுட்பத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த கண்காணிப்பு கருவி எல்லை வரையறை, ஊடுருவல் உள்ளிட்டவை குறித்தும் உரிய தகவல்களை வழங்கும்.

❖❖❖❖❖❖❖❖

## அஷ்விணி வைஷ்ணவ்

**நாட்டில் தகவல் தொழில்நுட்பம், ரயில்வே** விரிவாக்கம், பொது உள்கட்டமைப்புகளில் முதலீடு உள்ளிட்ட துறைகளின் முன்னேற்றம் குறித்து உலக பொருளாதார அமைப்பிடம் எடுத்துரைக்கப்பட்டதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்ட செய்தியில் இப்பணிகளின் முன்னேற்றம் குறித்து உலக பொருளாதார மைய தலைமை செயலதிகாரியுடன் தாம் முக்கிய ஆலோசனை மேற்கொண்டதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

## டொனால்டு டிரம்பின்

**அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பின் பிறப்புரிமை** அடிப்படையில் குடியுரிமை ரத்து தொடர்பான ஆணைகளை தற்காலிகமாக நிறுத்திவைத்து வாஷிங்டன் சியாட்டல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த புதிய உத்தரவிற்கு எதிர்ப்பு தெரிவித்து அமெரிக்காவின் 22 மாகாணங்கள் உட்பட பல்வேறு நாடுகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து எதிர்ப்புகள் அதிகரித்த நிலையில் இந்த உத்தரவு நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

மேலும் இந்த வழக்கு தொடர்பான அடுத்தக்கட்ட விசாரணை வரும் 6-ம் தேதி நடைபெறும் என்றும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖

**மருந்துகள்**

**நாட்டில் பல்வேறு மருந்து தயாரிப்பு நிறுவனங்களில் 135** மருந்துகள் நிலையான தரத்தில் இல்லை என மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இவற்றின் மாதிரிகள் சோதனை செய்யப்பட்ட நிலையில் பல்வேறு தர அடிப்படையில் இம்மருந்துகள் பரிந்துரைக்க தக்கதல்ல என்றும், இவற்றை உடனடியாக சந்தைகளிலிருந்து அப்புறப்படுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

**முதலமைச்சர்**

**தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட மற்றும் பழங்குடியின** மக்களின் மேம்பாட்டிற்கான பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசியஅவர், தேர்தல் வாக்குறுதிகளில் பெரும்பாலானவை நிறைவேற்றப்பட்டுள்ளதாக கூறினார்.

அரசின் மக்கள் நலத்திட்டங்களால் தமிழகத்தில் அனைத்து குடும்பங்களும் பயன்பெற்று வருவதாக தெரிவித்த முதலமைச்சர், மகளிர் உரிமைத்தொகை, இலவச பேருந்து பயணம் புதுமைப்பெண், தமிழ்புதல்வன் உள்ளிட்டவற்றை சுட்டிக்காட்டினார்

பள்ளி மாணாக்கருக்கான காலை உணவு திட்டத்தை பிற மாநிலங்கள் மட்டுமல்லாமல் வெளிநாடுகளும் பின்பற்றி செயல்படுத்துவதாக முதலமைச்சர் பெருமிதம் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖

**செந்தில்பாலாஜி**

**தமிழகத்தில் கோடைகாலத்தில் தடையற்ற சீரான** மின்விநியோகத்திற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக மாநில மின்துறை அமைச்சர் திரு. செந்தில்பாலாஜி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அனைத்து மண்டல மின்வாரிய உயரதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்ட அவர், குறைந்த அழுத்த மின்மாற்றிகள் கண்டறியப்பட்டு அவற்றை சரிசெய்யும் பணிகள் நடைபெறுவதாக கூறினார்.

வீடுகளில் மின் கணக்கீட்டிற்கான ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்றும், மின்வாரிய காலி பணியிடங்களை அத்தியாவசிய அடிப்படையில் விரைந்து நிரப்புவதற்கான பரிந்துரை அனுப்பப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

**காந்தி**

**ராணிப்பேட்டை மாவட்டம் மாங்காடு பகுதியில் 32அரை கோடி** ரூபாய் மதிப்பிலான சாலை மேம்பாட்டு பணிகளுக்கு மாநில கைத்தறி துணிநூல்துறை அமைச்சர் திரு. ஆர்.காந்தி இன்று அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் பசுமை திட்டத்தின் கீழ் சாலையோரங்களில் மரக்கன்றுகளையும் அமைச்சர் நடவு செய்தார்.

❖❖❖❖❖❖❖❖

**பொது கணக்கு குழு**

**தமிழக சட்டப்பேரவை பொது கணக்கு குழுவினர் சிவகங்கை** மாவட்ட வளர்ச்சிப்பணிகள் குறித்து இன்று ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

கல்வி, நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல், நெடுஞ்சாலை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் மேற்கொள்ளப்படும் மேம்பாட்டு பணிகள் குறித்து காரைக்குடி, திருப்பத்தூர், உள்ளிட்ட இடங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷாஅஜித் தலைமையில் இந்த ஆய்வு நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖

**தேனி வாய்ஸ்**

தேனி மாவட்டத்தில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்தநாளை முன்னிட்டு இரட்டை மாட்டு வண்டி ரேக்ளா பந்தயம் இன்று நடைபெற்றது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖❖

**திருச்செந்தூர் வாய்ஸ்**

**திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி** திருக்கோவிலில் கடந்த 18-ம் நூற்றாண்டில் ஒலிக்கப்பட்ட பிரம்மாண்ட கோபுரமணி மீண்டும் ஒலிக்க தயாராகி வருகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖❖

**தென்காசி வாய்ஸ்**

தென்காசி மாவட்டத்தில் சின்ன வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளதால் சாமானிய மக்கள் கவலையடைந்துள்ளனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖❖

**இருவரி**

காஞ்சிபுரம் பேருந்து நிலையத்தில் சாலைபாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் இன்று தொடங்கிவைத்தார்.

இதேபோல் நாமக்கல்லில் நடைபெற்ற சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சியில் காவல்துறையினர் மாணாக்கர் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

**நீலகிரி, பொள்ளாச்சி பகுதிகளில் பொதுமக்களை** அச்சுறுத்தி வந்த புல்லட் யானை பிடிக்கப்பட்டு நெல்லை மாவட்டம் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பக அடர்ந்த வனப்பகுதியில் விடப்பட்டது.

**வைகை இலக்கியத்திருவிழா திண்டுக்கல்லில் இன்று** நடைபெறுகிறது.

மாணாக்கர் மற்றும் பொதுமக்கள் இடையே வாசிப்பின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் பிரபல எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் மற்றும் கவிஞர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

**தமிழகத்தில் MBA, MCA, உள்ளிட்ட** முதுநிலை மாணாவர் சேர்க்கைக்கான டான்செட் நுழைவுத்தேர்விற்கு இன்றுமுதல் அடுத்தமாதம் 21-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என அண்ணா பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

**திருவாரூரில் 3-வது புத்தகத் திருவிழாவை** இன்று தொடங்கி வரும் 2-ம் தேதிவரை நடைபெறுகிறது.

பல்வேறு தலைப்புகளில் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் இதில் இடம்பெறுகின்றன.

**கரூர் மாவட்டம் மண்மங்கலம், அரவக்குறிச்சி,** புகழூர் உள்ளிட்ட 7 வட்டங்களில் பொதுவிநியோக குறைதீர்நாள் கூட்டம் நாளை நடைபெறுகிறது.

குடும்ப அட்டையில் பெயர்சேர்த்தல் நீக்கல் திருத்தம் உள்ளிட்டவற்றிற்கு இதில் விண்ணப்பிக்கலாம்

**அரியலூர் மாவட்டம் திருமானூர் வட்டத்தில் தரிசு** நிலங்களை மேம்படுத்தி விவசாயம் செய்ய மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்படுவதாக வட்டார வேளாண் அலுவலகம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖

**கால்பந்து**

**I.S.L. கால்பந்து போட்டியில் இன்றிரவு ஏழரை** மணிக்கு ஈஸ்ட் பெங்கால் அணி - கேரளா பிளாஸ்டர்ஸ் அணியை எதிர்கொள்கிறது

❖❖❖❖❖❖❖❖

**ஹாக்கி**

**ரூர்கேலாவில் நடைபெறும் ஹாக்கி இந்தியா லீக்** தொடரில் இன்றிரவு நடைபெறும் போட்டியில் கலிங்கா லான்ஸர்ஸ் - பெங்கால் டைகர்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖❖